# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2022 விடை—இரட்டை (மே—சூன்-91) ஓர் உருபா (இத எண்: 146)


# சட்டிக்குத் தப்பி, நெருப்பில் விழுந்தது தமிழகமே!

வட்டிக்குத் தேம்பி, முதலை
இழந்திடும் வறியர்களாய்—
மட்டித் தனமாய்க் கவர்ச்சியில்
மயங்கிடும் மடித்தமிழர்—
எட்டிக் கொட்டையில் இனிப்பைச்
சுவைத்திட இசைந்து விட்டார்!
சட்டிக்குத் தப்பி நெருப்பில்
விழுந்தது தமிழகமே!

வெட்டிக் கொண்டு செத்திடும்
நரவெறி வீம்பர்களாய்—
கட்டிக் கொண்டு கடலில்
இறங்கிடும் களியர்களாய்—
முட்டிக் கொண்டு முரண்பட்(டு)
அலைந்து முடிவினிலே
தட்டிப் பறிக்கும் தலைமையின்
கால்கீழ்த் தங்கினரே!

'எதற்கு' 'ஏன்' 'எதை' 'எவ் வாறு'-என
எண்ணும் உணர்விலராய்—
'முதற்கோள் என்ன' முடிவுகோள்
என்'னெனும் முனைப்பிலராய்ச்
சிதற்காட் பட்ட சுவடியாய்ச்
சிற்சிறி தாயழியும்
முதற்றுய்த் தமிழினம் முழுவதும்
அழிவுற முற்பட்டதே!

தப்படித் தாடும் தொம்பருக்
காட்டும் தலைக்குரங்காய்ச்—
செப்படித் தாடும் ஆட்டத்தில்
இழக்கும் சூதர்களாய்—
முப்படித் தாக்கம் நாட்குநாள்
எய்துவர் முழுத்தமிழர்!
எப்படித் தேற்றுவோம்? எவ்வகை
ஆற்றுவோம் இவர்களையே!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான, விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

### துணைப் பொதுச் செயலாளர் அறிவிப்பு!

**1. தலைமைக் கழக உறுப்பினர்களுக்கு!**

வணக்கம், தங்களின் பணி "*தமிழ்நிலம்*" வெளியீடு பற்றிய ஆய்வாகவும், *தமிழ்நிலம்*, வெளியீட்டுக்கு உதவுவதாகவும் வரையறுக்கப் பட்டது என்றாலும், தாளிகை அமைப்பைக் கட்டும் ஆற்றல் கொண்டது. ஆகவே,

*தமிழ்நிலம்* வளர்ச்சி,வடிவமைப்பு—விற்பனை உள்ளடக்கம் குறித்த ஆய்வுகளைத் தொடர்வதோடு, தலைமை அமைப்புடனும், கழக முதல்வருடனும் கலந்து பேசித் தமிழக நடுவக்குழுவின் எல்லை-யறிய ஏற்பாடு செய்யுங்கள்.

தமிழக—நடுவக்குழுவோடும், உறுப்பினர்-களோடும், செயலமைப்புகளோடும் '*தமிழ்நிலம்*' வளர்ச்சி முன்னேற்றம் குறித்துப் பேசுங்கள்—செயல்படுங்கள்-புத்துணர்ச்சி பெறத் தூண்டுங்கள்.

பறம்புக்குடி தங்கள்,
25-10-90 **துணைப் பொதுச் செயலர்**

பெறல் :

1) திரு. **தி.மு. அரசமாணிக்கம்**, தலைமைக்குழு உறுப்பினர், ஈரோடை - 638 011.
2) **பாவலர் தமிழ்க்கனல்**, தலைமைக்குழு உறுப்பினர், கண்டிதப்பட்டு (அஞ்சல்) தஞ்சாவூர்-614 904

**2. தலைமைக் கழக அமைப்புச் செயலர்க்கு,**

வாழ்த்துகளுடன், உ.த.மு.க. தமிழக நடுவக்-குழுவின் தலைமைக் கழகச் செயலராகத் தெரிவு செய்யப்பெற்ற தங்களைப் பெரிதும் பாராட்டுகின்-றேன்.

கிளை, நடுவக்குழு என்ற இரண்டடுக்கு முறை-யில் தொடங்கியுள்ள உ.த.மு.க. — தமிழகப் பணியை முடுக்குங்கள். ஏற்கனவே, '*தமிழ்நிலம்*' இதழில் வெளிவந்துள்ள அமர்த்தம், (அறிக்கை) பற்றி ஆராய்க. புதிய அரத்தம் பாய்ச்சும் அமைப்பு வேலையில் உண்டான தடை, விடை பற்றி அவ்வப்போது எழுதுங்கள்.

பறம்புக்குடி **துணைப் பொதுச் செயலர்.**

பெறல் :- *திரு. த. தமிழ்த் தென்றல்*, தமிழகத் தலைமைக் கழக அமைப்புச் செயலர், உ.த.மு.க—தமிழக நடுவக்குழு, காச வளநாடு, தெக்கூர்; தஞ்சை மாவட்டம்.

**3. தூய தமிழ ஆய்வியக்க நெறியாளர்க்கு,**

வாழ்த்துகளுடன், தூயதமிழ் ஆய்வில் ஈடு-பட்டுள்ள தமிழின அறிஞர்களுடனும் பிறருடனும் நல்லுறவு கொள்ளும் அணுகுமுறையைக் கைக்-கொள்ளுக!

தமிழறிஞர் ஆய்வு முடிவுகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் இயக்கப் பணியை உ.த.மு.க வழியினில் மேற்கொள்ளத் திட்டமிடுக.

பாவலரேறு, இறைக்குருவனார், ஆய்வறிஞர் அருளி ஆகிய உ.த.மு.க வினரன்றி, மொழி ஆய்-வில் ஈடுபட்டுள்ள அனைவரோடும் தொடர்பு கொண்டு, கலந்துரையாடல், கலந்தாய்வு, ஒப-பாய்வு நடத்த முயலலாம். இதற்கும் முன்பாக, உ.த.மு.க ஆர்வலர்—அன்பர்களின் மொழியுணர்வு, தூயதமிழ்வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகை-யில் கூட்டம் நடத்துக!

அறைக்கூட்டம் போன்ற எளிய முயற்சிகள் மூலம், *தென்மொழி*, *தமிழ்ச்சிட்டு* வெளியீடு-களைப் பரப்புதல் செய்யலாம். பாவலரேறு, பாவாணர், அருளி, மறைமலையடிகள், புரட்சிப்-பாவலர், அப்பாத்துரையார்...போன்ற மொழியறி-ஞர்களின் நூல்களை வாங்கவும், படிக்கவும், பயில-வும், பரப்பவும் முதல் கட்டமாக முனையலாம்.

இன்று மொழி பற்றிய மார்க்சிய அறிஞர் கண்ணோட்டம் குறித்த நிலைமைகளை ஆராய்வதும் வேண்டுமெனக் கருதுகின்றேன்.

"உ.த.மு.க. — தூயதமிழ் ஆய்வியக்கம்" என்ற அமைப்பைக்கட்டத் தாங்கள் மேலும் இரு-வரைத் தேர்ந்து தமிழக அளவில், செயல்படத் திட்டமிடுக.

தாங்கள் கிளை கட்டுவதில் மொழிபற்றிய கருத்தோட்டம் உடையவரை அடிப்படையாகக் கொண்டியங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

*ஆசிரியவுரை:*

# தேர்தல் காற்று திசை மாறியது!

சென்ற மாதம் நடந்து முடிந்த இடைப் பொதுத் தேர்தலில் இந்தியா முழுவதும், தேர்தல் முடிவுகள், மக்களும் கூர்த்த அரசியல் நோக்கர்களும் கூட எதிர்பாராத வகையில்; வெளியாகி உள்ளன. இந்திரா பேராயம் அறுதிப் பெரும்பான்மை (256) பெறுமலேயே, பிற கட்சிகளை விட மிகுதியான (224) இடங்களைப் பெற்று, ஒற்றுக் குத்தலான முறையில் நடுவணரசைக் கைப்பற்றியுள்ளது.

இந்திரா பேராயத்திற்கு அடுத்தபடி வட மாநிலங்களில், பிற கட்சிகளை விட மிகுதியான (119) பாராளுமன்ற இடங்களைப் பச்சைப் பார்ப்பனக் கட்சி (விசுவ இந்து பரிசத், ஆர். எசு. எசு. முதலிய கட்சிகள் இணைந்த கூட்டம்)ஆன பாரதீய சனதா கைப்பற்றியிருப்பதுடன், வடக்குப் பைதிர (உத்திரப் பிரதேச) மாநில ஆட்சியையும் முதன் முதலாகக் கைப்பற்றியுள்ளது. ஏற்கனவே சென்ற தேர்தலில் அது கைப்பற்றியிருந்த இராசத்தான், குசராத் இரண்டையும் அது தக்க வைத்தும் கொண்டுள்ளது.

நடுவணரசைக் கைப்பற்றியது போலவே, வட பகுதிகளில் நடுவண் பைதிரம்(மத்தியப் பிரதேசம்), ஒரிசா, மகாராட்டிரம், அசாம் ஆகிய மாநிலங்களையும் இந்திரா பேராயம் கைப்பற்றியுள்ளதும் வியப்புக்குரியதே!

வட புலத்தில் ஏற்பட்டுள்ள இம் மாற்றங்களைப் போலவே, தென் புலத்திலும், கேரளா, ஆந்திரா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களையும் இந்திரா பேராயமே கைப்பற்றியுள்ளது.

தமிழ் நாட்டில், வரலாற்றில் இதுவரை இல்லாத முறையில், அ.இ.அ.தி.மு.க. என்னும் செயலலிதா கட்சி (இது பெயருக்குத்தான் திராவிடக் கட்சியாக ம.கோ.இரா. பெயரில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளதே தவிர, இதன் தலைமையின் வலிந்த முற்றுருமையால், இதுவும பார்ப்பனியமும் வீடணமும் கலந்த தமிழின நல எதிர்ப்புக் கட்சியே!)—மிக மிகப் பெரும்பான்மை (163+1) பெற்றதுமன்றி, நிலையான—ஏறத்தாழ பதின்மூன்றாண்டுக் காலம் தமிழ் நாட்டை ஆண்டிருந்த திராவிட இனவுணர்வுக் கட்சியான 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் இப்போதைய கலைஞர் கட்சியை, முழுவதுமாக ஆட்சி ஆளுமையிலிருந்து அகற்றி, வெற்றியுடன் அரசைக் கையகப் படுத்தியுள்ளது.

இந்த மாற்றங்களில் நம் கவனத்தை மிகுவாகக் கவர்ந்ததும், தமிழர்கள் அனைவரும் மிகு கவனம் செலுத்த வேண்டியதுமான மாற்றங்கள் மூன்று.

ஒன்று, இந்திரா பேராயம் நடுவணரசை மீண்டும் கைப்பற்றியுள்ளது.

இரண்டு, ஒரு பச்சைப் பார்ப்பன இந்து மத வெறிக் கட்சியான பாரதீய சனதா 'உத்திரப் பிரதேச'த்தைக் கைப்பற்றியதும், பாராளுமன்றத்தில்,இந்திரா பேராயத்திற்கடுத்த படி மிகுதியான இடங்களைப் பெற்றுள்ளதும்.

மூன்று, தமிழ் நாட்டில் அ.தி.மு.க. வென்னும் செயலலிதா கட்சி முற்றுருமை (சர்வாதிகாரம்) பெற்ற நிலையில் ஆட்சி அமைத்ததும், அதன் தாக்கத்தால், தி.மு.க. (குறிப்பாகக் கலைஞர்) ஆட்சியதிகார அரசியலிலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் (கலைஞர் மட்டும் வென்று வந்த ஒரே ஓர் இடத்தையும் கைவிட்டது) துடைத் தெறியப் பட்டது.

இம் மூன்று மாறுதல்களும் இந்திய ஆட்சி வரலாற்றில், மிகப் பெரும் தமிழின நலத்துக்கான எதிர் விளைவுகளுக்கு அடிப்படையானவை என்பதைத் தமிழர்கள் உணர்தல் வேண்டும்.

நடுவணரசாட்சியில் அமர்ந்துள்ள இந்திரா பேராயம் அவ் விடத்தை எப்படிப் பெற்றுள்ளது என்பதை விட, அது, தமிழின நலத்துக்கு எவ்வளவு கேடானது என்பதையே இப்பொழுதைக்குத் தமிழர்கள் சிந்தித்தல் வேண்டும். நடுவணரசுக்குப் பொறுப்பேற்றுள்ள நரசிம்மராவ், கடந்த கால இராசீவ் ஆட்சியில், அவரின் கைப் பாவையாக விளங்கி, இந்திய, அமைதிப் படை இலங்கை செல்லக் காரணமாயிருந்தவர். அவர் சிறந்த அறிஞர் ஆனாலும், பார்ப்பனரின் அறிவு மேம்பாடு, தமிழினத் தாழ்ச்சிக்கோ, அல்லது தளர்ச்சியின்மைக்கோதாம் பயன்படும்—பயன்பட்டிருக்கிறது—என்பதைத் தமிழர்கள் இராசாசி, டி.டி.கே., இராதாக் கிருட்டிணன், நேரு, இந்திரா, இராசீவ் முதலியவர்களை வைத்து எடை போட்டுக் கொள்ள வேண்டுகிறோம்.

1 இந்து மதவெறி இத்துணையளவு பெருகியமை.

2 இந்தி மொழி மேலும் மேலும் வலிந்து பரப்பப் பெறுதல்.

3 கல்வி, பண்பாடு முதலிய மக்கள் இன நல மேம்பாட்டிற்குரிய துறைகள் நடுவணரசின் பார்ப்பனிய மேலாளுமையின் கீழ் சென்றமை.

4 வானொலி, வானொளி முதலியவற்றுள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கூறுகளும், வேத மதீ, புராணக் கருத்துகளும் முக்காற் பங்குக்கும் மேலான இடத்தைக் கைப்பற்றியமை.

5 பார்ப்பனர்கள் தம்முள் 3 விழுக்காட்டினராக இருந்து கொண்டு பதவி, அதிகார, பண ஆளுமை இடங்களில் 85 விழுக்காட்டைக் கைப்பற்றிக் கொண்டமை.

6 அயல் நாட்டுத் தொடர்புகளைப் பார்ப்பன, பார்ப்பனீயப் பரவல்களாக ஆக்கிக் கொண்டமை.

7 இந்தியாவைப் படிப்படியாகப் பார்ப்பனீயச் சார்பான நாடாகவே ஆக்கி வருகின்றமை.

8 இந்தியாவில் பிற தேசிய இனங்களின் தனித் தன்மைகள் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருகின்றமை.

9 மொழிச் சிறுபான்மை, மதச் சிறுபான்மை இனங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக வலுக்-குறையச் செய்து, மெலிவுற்று, வலுவிழக்கச் செய்து, முடிந்தால் அழித்தல்; அல்லது இந்து மதத்தோடு கலந்து விடச் செய்தல்; அல்லது மதிப்பிழக்கச் செய்தல்.

10 இந்தியாவில் ஆரிய இனத்துக்கு நேர் எதிரான தமிழ் மொழியையும், தமிழினத்தையும் காலப் போக்கில் வலுக்குன்றச் செய்து, அதற்கென ஒரு தனி நாடு இங்கோ, ஈழத்திலோ உருவாகாமல் தடுத்துத் தன்னை முழு வலிமையும் ஆளுமையும் உள்ள ஒரே இனமாக ஆக்கிக் கொள்ளுதல்.

—இவைதாம் பார்ப்பனர்-அறிவாண்மையும் வணிகரின் பணவாளுமையும் சேர்ந்து ஆட்சி வலுப் பெற்றதால் ஏற்பட்ட—ஏற்படும் விளைவுகள்.

திரு. நரசிம்மராவ் ஒரு தெலுங்கர் எனினும் பார்ப்பனரே! வட நாட்டுப் பார்ப்பனரை விடத் தென்னாட்டுப் பார்ப்பனரில் தெலுங்குப் பார்ப்பனர் பார்ப்பனீயத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர். காரணம் மூன்று. அம்மொழியில் உள்ள சொற்களில் நூற்றுக்கு அறுபது, எழுபது விழுக்காடு சமசுக்கிருதச் சொற்கள்—என்பது ஒன்று. அதில் உள்ள பொது இலக்கியங்கள், பத்திமை (பக்தி இலக்கியங்கள், வேத, புராண, இதிகாசத் தொடர்பை மிகுதியும் கொண்டிருப்பவை, இரண்டு. மூன்றுவது, அதிலுள்ள இசை, குறிப்பாகத் திருவாரூர் தியாகராசர் இறையிசை (கீர்த்தனை) முழுவதும் ஆரியக் கடவுளான திருமாலையும், அவர் மாந்த இறக்கங்களான (அவதாரமான) கிருட்டிணனையும், இராமனையுமே மிகுதியும் போற்றிப் பரிடியவை. தென்னாட்டுக் கடவுளான சிவன் வழிபாடு ஆரியர்களுக்கும் (சிறப்பாக வட நாட்டுப் பார்ப்பனர்க்கும் ஆந்திரத் தெலுங்கர்களுக்கும்) பிடிப்பதில்லை. ஆந்திராவிலுள்ள திருப்பதியில் உள்ள திருவேங்கடவன் (வெங்கடாசலபதி) கோயில் வருமானம், வடநாட்டில் உள்ள காசி விசுவநாதர் கோயில் வருமானத்தையும் விடப் பன் மடங்கு பெருகியிருப்பதற்கு இதுவே காரணம்.

எனவே, இராசீவ் ஆட்சியிலிருந்த பொழுது பார்ப்பன ஆளுமை பெற்றிருந்தது போலவே, நரசிம்மஇராவ் காலத்திலும், ஓர் இம்மியும் குறையாமல் வலிந்த ஆளுமை பெறும். இன்னுஞ் சொன்னால் பார்ப்பனர்க்கு நரசிம்மஇராவால் கூடுதலாகவே பயன் கிடைக்கும். காரணம் இவரை அவர்கள் தென்னாட்டுக்காரர் என்பதால் அடக்கியும் சூழ்ச்சியாகவும் நன்மையும் வலிமையும் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே தமிழர்களுக்கு எவ்வகை நன்மையும் புதிய தலைமையமைச்சரால் கிடைத்து விட முடியாது. வடநாட்டுப் பார்ப்பனரை விஞ்சித் தலைமையமைச்சர் எதுவும் செய்து விட மாட்டார். மாறாக அவர்கள் திட்டங்களுக்கு முற்றிலும் இவர் சார்பாகவே நடந்து கொள்வார். தமிழீழ முயற்சிகளிலும் தமிழர்க்கு எதிரான பயன்களே கிடைக்கும்.

அடுத்து, பாரதீய சனதா முன்னை விட வலிமை பெற்றிருப்பதும் தமிழினத்திற்கு மிகக் கேடானதே. மேற்கு வங்கத்தில் மட்டும், அது கடந்த 1987-ஆம் ஆண்டுத் தேர்தலில் பெற்ற ஒப்போலைகள் 1-70 விழுக்காடே! ஆனால் இந்தத் தேர்தலில் 11·30 விழுக்காடு பெற்றுள்ளதும் அதன் வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்து மத வெறியர்களாகிய அத்துவாணியும் வாச்பேயும் இந்தியாவில் வேறு தேசிய இனங்களை வளரவிடவும் உரிமை பெறவும் இடந்தர மாட்டார்கள். இங்கு உள்ள அனைத்து இனங்களையும் இந்து மதத்தை (பார்ப்பனரின் வேத மதத்தை)ச் சார்ந்தவர்களாக இருக்கவே—அவ்வாறு இல்லாத விடத்து ஆக்கவே—அவர்கள் உறுதி பூண்டு செயல்பட்டு வருகிறார்கள். இந்து மதம் என்னும் பெயரில் அம் மதவெறிச் செல்வர்களிடமிருந்து இவர்கள் கோடி கோடியாய்ப் பணம் திரட்டி வைத்திருக்கிறார்கள். எனவே, இவர்களின் வளர்ச்சியும் தமிழினத்திற்குத் தாழ்ச்சியையே உண்டாக்கும்.

இனி, மூன்றுவதாக, தமிழ் நாட்டில் செயலலிதாவின் அ. தி. மு. க. முற்றாளுமை (சர்வாதிகார) ஆட்சியில் அமர்ந்து விட்டது, தமிழின வளர்ச்சிக்குப் பெரியதொரு முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

கட்சி நிலையில் ம.கோ.இராவின் அ.தி.மு.க. வேறு, செயலலிதாவின் அ.தி.மு.க. வேறு. அதில் கொஞ்சமேனும் திராவிடவுணர்வு இருந்து வந்தது. இன்றைய செயலலிதா கட்சியோ தமிழுணர்வு என்பது ஓர் எள்ளின் மூக்கத்துணையும் இல்லாதது. தமிழுணர்வு இல்லாத பொழுது தமிழினவுணர்வு எங்கிருந்து வரும்? மொழியாலும் இனத்தாலும் செயலலிதா தமிழினத்திற்கு நேர் எதிரானவர். கன்னடப் பார்ப்பனப் பெண்ணான இவரிடம் தமிழுணர்வையோ, தமிழின உணர்வையோ எதிர் பார்ப்பது கல்லில் கனிவை எதிர்பார்ப்பது போலும் முழு அறியாமையே! இந் நிலையில் இவருடன் தலைமை வரிசையில் அமர விரும்பிய

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

முன்னிதழ்த் தொடர்ச்சி

# இந்தியத் தமிழகத்தில் தமிழர் ஆட்சியும்- பார்ப்பனர் சூழ்ச்சியும்!

--அதியமான்

அத்வாணியின் தேர் பீகார் போனது. சமசுதிப்பூரில் அவர் தளை செய்யப்பட்டார். பாரதிய சனதா தேசிய முன்னணி அரசுக்கு வெளியிலிருந்து அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெறப் போவதாகக் கூறி விட்டார். அதன்படி 23-10-90-இல் குடியரசுத் தலைவருக்கு அதன் தலைவர்களில் ஒருவரான ஏ.பி. வாசுப்பேய் அரசுக்கு அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெற்று விட்டதான வேண்டுகையை அளித்தார். வி.பி. சிங் அரசு கவிழ்க்கப்பட்டு விட்டது. அடுத்து, குடியரசுத் தலைவருடைய கைவேலைகள் தொடங்கின. ஆட்சி அமைக்க இந்திராப்பேராயம் அழைக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வகையில் செய்யக் கூடாது என்பது குடியரசுத் தலைவருடையதும், இராசீவ் காந்தியினுடையதுமான திட்டங்களாகும். அதனால் வி.பி-சிங் தனக்குப் பெரும்பான்மை இருப்பதாய்க் கூறுவதில் இயலாச் செயல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டனர். எங்கெங்கே பார்ப்பனரல்லாத ஆட்சி நடைபெறுகிறதோ அவற்றையெல்லாம் ஒழிக்க வேண்டும் அல்லவா? பழிவாங்கும் படலம் தொடங்கியது. தேசிய முன்னணி ஆட்சிக்குப் பாரதீய சனதா அளித்து வந்த வெளி ஆதரவையும் திரும்பப் பெற்றது குறித்தும் பார்ப்பனர்கள் மகிழ்ந்தனர். (காந்தி சுடப்பட்டதற்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்த ஆரிய இனமல்லவா!) பூரிச் சங்கராச்சாரியார் (பார்ப்பனர்) தேசிய முன்னணிக்குப் பாரதீய சனதா அளித்துவந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டதைப் பாராட்டி வரவேற்றார். சிவசேனை, விசுவ இந்துப் பரிசத், போன்ற பார்ப்பன அமைப்புகள் யாவும் அத்வாணி தளை செய்யப்பட்டதைக் கண்டித்தன. பார்ப்பனர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பார்ப்பனர் ஆட்சியைக் கொண்டுவரப் பாடுபடுகின்றனர். திட்டம் வகுக்கப்பட்டது. பாரதீய சனதாவும், இராசீவ் காந்தியும் ஒன்றாக இருந்து செயல்பட்டனர். அக்டோபர் 17-ஆம் நாளில் நடந்த இராமன்-கோவில்-பாபர் பள்ளிவாசல் சிக்கல் பற்றி ஆயக் கூட்டபட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு இருவரும் போகவில்லை. இதுவே பார்ப்பனர் ஒற்றுமை. ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக்கொள்வதெல்லாம் இதிலிருந்து பொய் என அறிந்து கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பேராயக் கட்சியினுடைய தலைவராகவும் இருக்கும் இராசீவ் போகாமல் இருப்பது எவ்வளவு பெருந் தவறு. ஏன் போகவில்லை? பாரதீய சனதா விரும்பாத கூட்டம் அது. எனவே போனால் அக்கட்சியின் நட்பை ஒரு வேளை இழக்க வேண்டும் என்பதால் இராசீவ் போகவில்லை. மேலும் இருவரும் பார்ப்பனர். ஆகவே இருவரும் கூடி வி.பி. சிங் ஆட்சியைக் கவிழ்த்து விட்டனர்.

இராசீவ் நாட்டு மக்களிடம் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். ஆகவே அவர் சனதா தளம் ஆளுமை செய்வதை நான் விரும்புகிறேன். ஆனால் வி.பி. சிங்கிற்குப் பகரமாக (பதிலாக) அக்கட்சியில் வேறுயாரும் தலைமையமைச்சராக வந்தால் பேராயக்கட்சியின் ஆதரவு உண்டு என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார். மறைந்திருந்து கொல்லும் சூழ்ச்சியில் ஆரியர்கள் கைதேர்ந்தவர்கள் ஆயிற்றே. வாலியை இராமன் மறைந்திருந்துதானே கொன்றான். அந்தச் சூழ்ச்சி இங்கும் பயன் படுத்தப்பட்டது. பார்ப்பனத்தியின் தோல்மீதும், பார்ப்பனர்களின் சூழ்ச்சியிலும் ஏறத்தாழ 2500 ஆண்டுகளாக விழ்ந்து மீளமுடியாமல் இருக்கும் இனங்களாயிற்றே மற்றைய இனங்கள்! அதன்படி சந்திரசேகர் என்ற அடிமை முன் வந்தார். தாம் வளர்த்த பிள்ளையையே கொன்றார். சனதா தளத்திற்கு இரண்டகஞ் செய்தார். அதை இரண்டாகப் பிளந்தார்.

இவர் சனதா தளத்தில் உள்ள தலைவர்களில் ஒருவர். பேராயக் கட்சியையும், இராசீவ் காந்தியின் கெட்ட செயல்களையும் மக்களிடம் கூறி ஒப்போலை பெற்று வெற்றி பெற்ற சூழ்நிலை வழக்கர் (சந்தர்ப்பவாதி). ஓடு ஓடென்று ஓடினார். இராசீவைச் சந்தித்துத் தம்முடைய பதவி அவாவை வெளிப்படுத்திக் கும்பிட்டு நின்றார். ஆதரவு கிடைத்தது. சந்திரசேகர் எந்தக் கட்சியை இழிவு படுத்திப் பேசி உறுப்பினர் பதவியை மக்களிடமிருந்து பெற்றாரோ, அம்மக்களை ஏமாற்றி விட்டு இந்தியாவிற்குத் தலைமையமைச்சரானார். தந்நல ஆவலை நிறைவு செய்து கொண்டார். 'ஆறு கடக்கிற வரையில் அண்ணன், தம்பி; ஆறு கடந்தால் நீ யார் நான்யார்' என்னும் பழமொழிப்படி, அவர் மக்களை மதிக்கவில்லை.

தமிழ் நாட்டில் கலைஞர் ஆட்சி நடைபெறக் கூடாது என்பதில் மிகக் கவனமாகப் பார்ப்பன ஏடுகள் ஒருமுகமாக எழுதி வந்தன. மேலும் மேலும் கலைஞர் மீது குற்றங்களைக் கற்பித்தனர். பார்ப்பன அடிமைகள் பேராயக் கட்சியின் பெயரால் இருப்போர் வாழப்பாடி இராமமூர்த்தி, ப. சிதம்பரம், குமரி அனந்தன் ஆகியவர்கள் பார்ப்பனர்களுக்கு வீடணர்களாகவும், எட்டப்பர்களாகவும்

செயல் பட்டனர். தாங்களும் தமிழர்களுக்குப் பிறந்தவர்கள் என்பதை மறந்து விட்டனர். துணைக்கு அனைத்துலக அரசியல் வழக்கர்போல நடிக்கும் நடிகை செயலலிதாவின் முந்தானையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சவலைப்பிள்ளைகளாக அவர் பின்னால் வாய்பொத்திக் கைகட்டிச் சென்றனர். தமிழகக் கலைஞர் ஆட்சியைக் கவிழ்க்க அணியப்படுத்தி வைத்திருந்த செயலலிதாவை பார்ப்பனர் முடுக்கி விட்டனர். பார்ப்பனருடைய கருவிகளிலேயே சிறந்தது பெண்கருவியே. அவ்வகையில் இராசீவால் சந்திரசேகர் செயலலிதா வீட்டிற்கு அனுப்பப் பட்டார். ஒரு நாட்டினுடைய தலைமையமைச்சர் ஒரு மாநிலத்திற்கு வருகிறார். அரசு மதிப்புக்குரியவர் அவர். அவர் எங்கே தங்கவேண்டும்? அம்மாநில அரசு ஏற்பாடு செய்திருக்கும் இடத்தில்தான் தங்கி உணவு கொள்ள வேண்டும். அம்மாநில அரசு ஏற்பாடு செய்திருக்கும் இடத்தில்தான் தங்கி உணவு கொள்ள வேண்டும். யாரும் சந்திக்க விரும்பினால் முன்னிசைவு பெற்று அமைச்சரைச் சந்திப்பதுதான் மரபாக இந்நாள் வரை நடைமுறையிலுள்ளது. ஆனால் சந்திரசேகர் செயலலிதா இல்லத்திற்குச் சென்று சந்தித்தார். இருவரும் தமிழ் நாட்டு அரசியலைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். யாரும் உடன் இருக்கவில்லை. தமிழ் நாட்டில் பேராயக்கட்சித் தலைவர்கள் அரசியலைக் கொஞ்சம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அடுத்து சந்திரசேகர் கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கின்றனர். கட்சி சார்பற்ற அரசியல் அறிஞர்களும் தமிழகத்திலுண்டு. அவர்களுக்கெல்லாம் அரசியலைப்பற்றித் தெரியாது என அவர் நினைத்தார் போலும். அதுதவிர ஆளுநரே அம் மாநில அரசியலைப் பற்றிக் கூறக் கூடியவர். அவர்களையெல்லாம் சந்திரசேகர் சந்திக்கவில்லை. படத்தில் கவர்ச்சி காட்டி நடித்த நடிகையைக் கண்டு அரசியல் பற்றி, அதுவும் தனிமையாகப் பேச வேண்டுமானால்...!ஏ! தமிழகமே நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்? உன் மானம் எங்கே? வீரம் எங்கே? ஞாயம் எங்கே? என்ன கொடுமை! எவ்வகையான நாகரிகமற்ற அரசியலை நடத்துகிறார்கள். என்ன கொடுமை! அ.தி.மு.க. வில் அரசியல் தெரிந்தோர் யாரும் இல்லையா? தமிழா உன் அடிமையை மீட்டெடுக்க முடியாது போலும்! முகத்தூளும் மஞ்சளும் பூசிய முகத்தில் வண்டுபோல் மயங்கிக்கிடக்கிறாயே தமிழா! அதோடு மட்டுமன்று செயலலிதாவும் இந்திய நாட்டுத் தலைமையமைச்சரும் ஒரே மகிழ் உந்தில் வானூர்தி நிலையத்திற்குப் போனார்களாமே! ஒரு நடிகையோடு ஒரு நாட்டின் பெரும் மதிப்பிற்குரிய தலைமையமைச்சர் மகிழ் உந்தில் போவதைக் கூட ஏன் என்று கேட்க உன் நாட்டில் உனக்கு உரிமையில்லாமல் இழந்து தவிக்கிறாயே! உன் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் உணர்ச்சியைத் தட்டிக்கேள். பெட்டிப் பாம்பாய் அடங்காதே! சீறும் பாம்பாக ஞாயத்தைக் கேட்டுப் போராடு.

இந்நாட்டின் அரசியலை ஒரு நடிகையும் கோவில் பூசாரியுமா பேசவேண்டும்? அன்றே சங்கராச்சாரியாரைத் தலைமையமைச்சர் கண்டு தனிமையாக ஒருமணிநேரம் பேசினார்கள். அப்போதும் அவர்களுடன் யாருமில்லை. சூது, சூழ்ச்சி செய்கிறவர்கள்தாம் குசு குசு வென்று பேசுவார்கள். அது தானே நடந்திருக்கிறது.

இந்நாடு எச்சமயத்தையும் சாராத நாடாகும், புளுகுகிறார்கள். தலைமையமைச்சர் வேறு சமயத்தலைவர்கள் யாரையும் சந்திக்கவில்லை. இந்து சமயத்தலைவர் சங்கராச்சாரியாரை மட்டும் சந்தித்துப் பேசினார். இது ஞாயமா? இவ்விரு சந்திப்புக்களைத் தவிர வேறு அரசியல் நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளவில்லை. நேரே டெல்லிக்குப் பறந்து விட்டார். செயலலிதாவைச் சந்தித்தது 26-12-90-இல். 30-12-90 இல் செயலலிதா தில்லிசென்று முதலில் இராசீவ் காந்தியை அவருடைய வீட்டில் சந்தித்துத் தனிமையில் இருவரும் 45 நிமையங்கள் பேசிக் கொண்டிருந்தனர். அதன்பின் தி.மு.க. ஆட்சியை விலக்கிட வேண்டும் என்று தலைமை அமைச்சரிடம் தமிழக ஆட்சியைக் குற்றப்படுத்தி வேண்டுகையைக் கொடுக்கிறார். பார்ப்பனரின் சூழ்ச்சித்திட்டம் நன்கு விளங்குகிறதன்றோ? தமிழர்களே எச்சரிக்கையாக இருங்கள். பதவிக்காகப் பார்ப்பனத்தியின் பின்னால் போனால் நீங்கள் மட்டுமே வாழலாம்; தமிழினம் அழியும பார்ப்பனியத்தின் பின்சென்றவர்களும் அழிவீர்கள். பெரும்பழியை எட்டப்பன வரலாற்றில் சேர்க்கப்படும்.

தி.மு.க. மீது சாட்டப்பட்டக் குற்றம் தமிழீழம் கேட்டுப் போராடும் விடுதலைபுலிகளுக்குக் கலைஞர் ஆதரவு கொடுத்தார் என்பது. கலைஞர் ஆதரவு கொடுப்பதற்கும் அரசுக்கும் என்ன தொடர்பு? அரசு சட்டத்தைப் பயன்படுத்தும் அதற்குக் கலைஞர் குறுக்கே நிற்கவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், தமிழர்கள் ஆளவும் கூடாது. அவன எந்நாட்டிலிருந்தாலும் வாழவும் கூடாது-எனபது இந்நாட்டுப் பார்ப்பனர்களின் அசையாக் கொள்கை- என்று தெரிகிறது. இக்கொள்கையிலிருந்து அவர்கள் ஓர் இம்மி கூட மாற மாட்டார்கள். கலைஞர் சட்டத்திற்குத் தவறாக நடக்கிறார் என்று தமிழ் நாட்டு மக்கள் யாராவது கூறினார்களா? மக்கள் இயக்கங்கள் எத்தனை இருக்கினறன. பார்ப்பனர் கட்சிகளாகிய பேராயக்கட்சியும் பார்ப்பனத்தியைத் தலைவியாகக் கொண்ட அ.தி.மு.க, வும் தவிர வேறு எந்தக் கட்சியாவது கலைஞர் புலிகளுக்கு ஆதரவு தருகிறார், ஏனவே அவராட்சியை நீக்கல் வேண்டும் எனத்தீர்மானம் போட்டது உண்டா? இல்லையே! மக்கள் விரும்பாத ஒரு செயலை வட நாட்டுப் பார்ப்பனர் சந்திர

சேகரன் என்ற பார்ப்பன அடிமையின் மூலம் வீழ்த்தி விட்டனர்.

தமிழ் நாட்டின் ஆளுமையைக் கவனித்து மேலிடத்திற்குச் சொல்ல அமர்த்தப்பட்ட ஆளுநரே தி.மு.க. ஆட்சியை நீக்க ஒத்துக் கொள்ளவில்லை. ஆளுநரின் அறிக்கையின் மீதுதான் ஓர் ஆட்சியைக் கலைக்க முடியும். அந்த மரபுக்கு மாறாக அவருடைய இசைவைப் பெருமலேயே இராசீவ், வேங்கட்ராமன், செயலலிதா, ஆகிய பார்ப்பனர்களும், அவர்களுடைய அடிமைகளாகிய வாழப்பாடி இராமமூர்த்தி, ப. சிதம்பரம், குமரி அனந்தன் ஆகிய கேடு கெட்டோர் பேச்சைக் கேட்டுத் தமிழக ஆட்சியைக் கலைத்து விட்டார்கள் என்றால், இந்தத் தடியாட்சியில் தமிழக மக்கள் இருக்க வேண்டுமா? இன்னும் எவ்வளவு காலங்களுக்கு வடவர்களுக்கு அடிமைகளாகத் தமிழகம் இருக்கவேண்டும் என சிந்தித்துப் பாருங்கள்- அடிமை வாழ்வை முடிவுகட்ட விரைவில் தமிழர்களே முன்னுக்கு வாருங்கள். ஆண்டவன், ஆளபபிறந்தவன் தமிழ் நாட்டை ஆளக்கூடாதாம. எங்கிருந்தோ வந்த வந்தட்டிச் சூதர்கள் இந்நாட்டையாணடு வளமாக வாழ வேண்டுமாம். என்ன கொடுமை! என்ன அறியாமை! எவ்வளவு அடிமை யறிவு!

இவ்வாட்சிக்கலைப்பு பின்னுக்குத் தள்ளப்பட்ட தாழ்த்தபபட்டவர்களுக்கு நன்மை எதுவும் செய்திடலாகாது என்று நடத்தப்பட்ட தீச் செயல். அதனாலேயே பார்ப்பனர்கள் ஒன்று கூடி ஆட்சியைக் கலைத்து விட்டு தமிழனுக்குப் பிறந்தவர்களாக இருந்தும் ஒரு பார்ப்பனத்தியைத் தமிழ் நாட்டிற்கு முதல்வராக்க முயலுவது தமிழ் நாட்டிற்குக் கேடு அவ்வகை நிகழ்ச்சி நடந்தால் குடியிருக்க வந்தவள் தமிழர்களுக்குக் கொள்ளி வைப்பாள்.

தமிழா! நீ எந்தக் கட்சியிலிருந்தாலும் இனத்தை மட்டும் மறவாதே! நல்லினத்தோடு இணங்கு.
நல்லினத்தின் ஊங்கு துணையுமில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். (குறள்460)

நல்லினத்தோடு இணங்கி வாழ்வதே துணையாகும். தீய இனம் அல்லலைத் தரும். ஆரியப் பார்ப்பனஇனம் வரலாற்றுப் பண்பாட்டடிப்படையில் தீ இனம். பதவி, பணம் வரும் போகும், ஆனால் இனம் இருக்கும். அந்த இனத்திடம வீடணனாக, கட்டபொம்மனாக தொண்டைமானாக வாழ்ந்து விடாதே வரலாற்றில் இரண்டகனாக இடம் பெற்று விடவேண்டாம்- நீங்காப் பழியைத் தந்து நிலைநிற்கும். பார்ப்பனர்கள் தாழ்ந்த, எளிய மக்களை அடிமைப்படுத்திய வரலாற்றை உணர்ந்த தமிழ் நாட்டு அரசியல் வழக்கர்கள் இதனை விரைவில் உணர வேண்டும். அல்லது உணர்ந்தவர்கள் ஒரு நாளைக்கு இந்த இரண்டகர்களை என்ன செய்வார்கள் என ஆய்ந்து கொள்வது நல்லது

கலைஞரும் இனி இந்திய தேசிய நீரோட்டத்தில் பதவி பெற விரும்ப வேண்டாம். என்றைக்காலும் தமிழர்களை வடநாட்டாரும் பார்ப்பனர்களும் தமிழர்களுக்கு நன்மைகளைச் செய்யவிடவே மாட்டார்கள். அவர்களை நம்புவது மண் குதிரையை நம்பி ஆற்று வெள்ளத்தைக் கடக்க நினைப்பதற்கு ஒப்பாகும். இரவல்சேலையை நம்பி இடுப்புத் துணியைத் தூக்கி எறிய வேண்டாம்.

பார்ப்பனியம் பார்ப்பனரிடம் மட்டும் இல்லை. தமிழர்களிடத்திலேயும் உள்ளது. பார்ப்பான் ஒரு பார்ப்பானிடம் கையூட்டு வாங்குவது கிடையாது. ஆனால் இங்கு தமிழர்களிடமே தமிழர்கள்கையூட்டு வாங்கி விழ்த்துகிறார்கள். கலைஞர்கூட தமிழர்களுடைய உயர்வுக்கோ, தமிழ் மொழி ஏற்றத்திற்கோ, தமிழ் நாட்டின் விடுதலைக்கோ இந்நாள் வரை எதுவும் செய்திட வில்லை. தமிழீழம் சீரழிந்து இருப்பதற்குக் கரணியம் இங்குள்ள தமிழர்களே! தி.மு க., அ.தி.மு.க., அதன தோழமை கட்சிகள் தமிழீழத்தை ஏற்பிசைவு செய்யும்படி நடுவண் அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் போனது பெருந் தவறாகும். கலைஞர் இதைத் தம்முடைய ஆட்சி கலைக்கப்படும் நிலையிலாவது தமிழீழத்தை ஏற்பிசைவு செய்யும் தீர்மானத்தைப் போட்டிருந்தால் பெருமையடையலாம். ஆனால் இன்னும் இந்திய நீரோட்டத்தில் பதவி பெற விரும்புகிறார். அவர்கள் ஒரு நாளும் இனிமேல் தமிழர்களை மனநிறைவோடு வாழ விட மாட்டார்கள். தமிழகத்தில் உழவர்களின் வாழ்க்கை வறுமையாகவே உள்ளது. இந்திய ஆட்சியாலோ மாநில ஆட்சியாலோ வளம் பெறவில்லை. தொழிலாளர்கள் பட்டினி கிடக்கின்றனர். எத்தனையோ தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. இவர்கள் அவற்றைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கவில்லை. படித்துப் பட்டம் பெற்று சிறந்தத் திறமை வாய்ந்த இளைஞர்கள் ஊர்சுற்றித் திரிந்து வேலை தேடி ஏமாறிக் கொண்டு கண்ணீர் விட்டு அலைகிறார்கள். தமிழ் மொழிக்கு எந்த ஆட்சியும் ஏற்றத்தைத் தரவில்லை. பின் எதற்காக இந்திய தேசிய ஒருமை என்னும் ஏமாற்று நீரோட்டத்தில் குதித்துச் சாக வேண்டும்?

இராசீவ் காந்தியின் பேச்சைக்கேட்டுப் பல மாநில ஆட்சியை விழ்த்திய சந்திரசேகரையும் அவர் ஒழித்துக் கட்டி விட்டார். இராசீவ் வீட்டில் உளவு பார்த்தார்கள் எனக் கரணியங்காட்டி விழ்த்திவிட்டார். இவ்வளவு செயல்கள் 26-12-90-இல் சென்னை வந்த சந்திரசேகர் தி.மு.க ஆட்சி கலைக்கப்படுமா எனக்கேட்டதற்கு, "அது குறித்த செய்திகளை பரப்புவோர் யார் என்று தெரியவில்லை; அது கற்பனை" எனக்கூறி மறுத்தார். 31-12-90-இல் இவ்வாட்சியைக் கலைக்கிறார். அவர் கலைப்புப் பற்றி வியப்பாக இருக்கிறது எனக் கூறியது பொய் என்று அதிலிருந்து 36- ஆவது நாளில

Scanned with CamScanner

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. நமக்குள் நாம்.

தமிழக உ.த.மு.க. நடுவக்குழு உறுப்பினர்களே, பொறுப்பாளர்களே, அன்பர்களே, ஆர்வலர்களே, வணக்கம். 'நமக்குள் வெளிப்படையாகப் பேசிக் கொள்வது' நல்லது. ஆனபோதும், அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்வதும், வளர்ச்சிக்கு ஊற்றமாக்கிக் கொள்வதும் சிறப்பாகும். எனவே, நாம் விளங்கிக் கொள்ளுதல் பொருட்டு நடைமுறையிலிருந்து சில செய்திகளைக் கூற விழைகின்றேன்.

'தமிழ்நிலம்', 'கழகமுதல்வர்', துணைப்பொதுச் செயலாளர் அறிவிக்கைகள், கருத்துகள் குறித்த முடிவின் மீது, கழகக் கொள்கைகளின் அடிப்படையில் நின்று நாம் செயல்படும், சிந்திக்கும், திறனும் உரிமை உடையவர்கள் ஆவோம்! ஆகவே, அவற்றினின்று விலகாமல், உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பது, துணைப் பொதுச் செயலாளரின் பொறுப்பென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்! நம்புகிறேன்...தொடர்கிறேன்...!

உ.த.மு.க. தமிழக நடுவக்குழு உறுப்பினர் புலவர். தி.மு. அரசமாணிக்கனார், ஈரோடையில் நமது கழகத்திற்கு ஓர் எழுச்சியை வழங்கும் நிகழ்ச்சியை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். புலவர். திரு. வடிவேலனார் அவர்க்கு உற்றதுணையாயிருந்திருக்கிறார்கள். பாராட்டிற்குரிய இவர்கள், இவர்களோடு தோள்நின்று உதவிய அன்பர், ஆர்வலர் அனைவர்க்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்!

ஈரோடை "மாநாட்டின்"— வரவு - செலவுச் சுருக்கத்தினை நம் 'புலவர். திரு. தி.மு.அ. அவர்கள் வரும் நமது 'தமிழக நடுவக்குழுவிற்குத் தருவார்கள் என எதிர்பார்க்கிறேன்! ஆக, நம் அமைப்பு நடைமுறையில் வரும் சிக்கல்களைத் தவிர்ப்பதும் அவற்றைத் தீர்ப்பதில் உதவுவதும் அனைவர்க்குமுள்ள கடமையென்றே கருதுகின்றேன்!

கழகத்தின் பொருளியல், வேலைச் சுமைகளை ஓரிருவர் மட்டுமே சுமப்பதென்பது இயலாது. அவற்றில் அனைவரும் பங்களிப்பது—சுமையேற்பது பயனும் சுவையும் தரும். 'பாரம் சுமக்க வாருங்கள்' என நம் கழக ஆர்வலர், அன்பர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன். அப்போதே, புதிய தன்மைகள், தலைமைகள் எதிர்காலத்தில் உருவாதல் இயலும்!

12-3-1991 துணைப் பொதுச் செயலர்,

## 2. அச்சுப் பணிகளில் விடுதலை!

அன்பு சான்ற பாவலரேறு — உ.த.மு.க முதல்வர் அவர்களுக்கு, வணக்கம்.

தங்களின் மடல், திரு. கோவி. மாரிமுத்து அவர்களின ஆர்வம் காட்டும் அஞ்சலட்டையுடன் பெற்றேன். உடனே, அவர்க்கு, வரைவறிக்கை மூன்று விடுத்துத் தனிமடல் எழுதியிருக்கிறேன்.

'தமிழ் நிலம்', 'தென்மொழி' 'தமிழ்ச் சிட்டு' அச்சுப் பணிகளில் தாங்கள் படும் 'தொல்லை'களிலிருந்து 'விடுதலை' பெற உ.த.மு,க அன்பர்கள்— இயக்கம் எப்படி உதவ முடியும் என்ற சிந்தனை தங்களைக் கடலூரில் சந்தித்த பிறகு அதிகமென்னை ஆட்கொண்டது. முயல்வோம்!

பிறபின்பு—அல்லது நேரில்.

பறம்புக்குடி. தங்கள்.
26-12-90 பறம்பை அறிவன்

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுகிறது. ஆட்சியைக் கலைத்துவிட்டார். இப்போது இராசீவின் பேச்சைக்கேட்டுத் தமிழ் நாட்டாட்சியைக் கலைக்கவில்லை எனக் கூறும் கூற்று முன்போன்ற சொல்லேயாகும். எனவே வடவரை நம்ப வேண்டாம். அவர்களுடைய ஆளுமையில் தமிழகம் இருத்தலும் கூடாது. இருந்தால் இன்னும் எத்தனைத் தலை முறைகளானாலும் தமிழ் நிலம் வளம் பெறாது, வளம் முழுவதும் வடக்கே போய்க்கொண்டிருக்கின்றன. வடக்கே வளருகிறது தெற்கே தேய்கிறதுஎனப் பல ஆண்டுகளுக்கு முன்னால் அறிஞர் அண்ணா சொன்னதை மனத்தில் இறுத்திப் பார்க்கவேண்டும்.

எனவே கலைஞர் செய்ய வேண்டியது. எல்லா வகையான கட்சிகளையும் ஒன்று சேர்த்துத் தமிழ் நாட்டின் உரிமைக்குப் போராடி, தமிழ் மக்களை வாழ வகைசெய்வதே நல்லதாகும். தமிழீழம் கிடைக்க அனைத்துக்கட்சிகளும் பாடுபட கலைஞர் பணியாற்ற வேண்டும். 'நாம் தமிழர்கள்; அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டோம்' எனப் பார்ப்பனர்களுக்குத் தெரிந்தாலே போதும், வந்த வழியைச் சரிசெய்ய முனைந்து விடுவார்கள்.

ஆகவே தமிழர்களே! சாதி, சமயச் சண்டைகளைத் தூக்கி எறிந்து விட்டுத் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு உரிமைபெற்று வாழ ஒன்று படுவோம். தமிழீழம் கிடைக்க ஏற்புடையது செய்யும்படி இந்தியாவை வற்புறுத்தத் தீர்மானங்களை நிறைவேற்றுங்கள் அல்லது தமிழ்நாடு பிரிய போராட்டத்தைத் தொடங்குங்கள். இப்போதைக்கு இதுவே தமிழர்களுடைய பார்வையில். முன் நிற்க வேண்டும்!

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்செழியன், சோமசுந்தரம், இராசாராம், கிருட்டிணசாமி போலும் அழுத்தமான திராவிட-வுணர்வுள்ளவர்களாகக் கடந்த காலங்களில் தங்-களைக் காட்டிக் கொண்டவர்கள், பதவி நலன், பண நலன் தவிர வேறு எந்த நலன்களை நாடிச் செயலலிதா அணிக்குப் போயிருக்க முடியும்? இஃது, அவர்களுக்கும் அவர்கள் தலைவராகக் கருதும் செயலலிதாவுக்குந்தான் தெரியும்! மேலும் செயலலிதாவின் முன்னிலையில் வாய் பொத்திக் கை கட்டி நிற்கும் இவர்களால், தமிழுக்கும் தமிழ-ருக்கும் எனறேனும் ஒரு நலனைப் பெற்றுத் தந்து விட முடியும் என்று எவரேனும் எதிர்பார்க்க முடி-யுமா? மானமிழந்து மதிப்பிழந்து செயலலிதா-விடம் உள்ள பணத்துக்கும் அவர் தரும் பதவி நலத்துக்காகவுமே அவர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் நடைப்பிணங்களே! இவர்களின் கருத்துகளுக்குச் செயலலிதாவிடம் மதிப்பும் இல்லை செவிச்சாய்ப்பும் இல்லை என்பது இவர்களுக்கே நன்கு தெரியும்.

அத்துடன் செயலலிதா பதவிக்கு வந்த எடுத்த எடுப்பிலேயே தமிழீழப் புலிகளைத் தமிழகத்தி-லிருந்து அப்புறப்படுத்துவதும், அவர்களின் போராட்ட முயற்சிகளை ஒடுக்குவதுமே தம் முதல் வேலை என்பதாகத் தெரிவித்துள்ளார். முந்தைய அ.தி.மு.க தலைவரான ம.கோ.இரா. விடுதலைப் போராளிகளுக்குப் பல வகையிலும் ஆதரவும், பணவுதவிகளும், கருவிகளும் கொடுத்திருக்க, செயலலிதா அவர்களை எடுத்த எடுப்பிலேயே அழித் தொழிக்கும் முயற்சியில் ஈடுபடுவது, அவருக்கும் இவருக்கும் கொள்கை அளவிலும் நோக்க நிலையி-லும் எவ்வளவு விரிந்த வேறுபாடுகள் உள்ளன என்பதைக் காட்ட வில்லையா? இந்த மனபாங்குக்கு இவர் தமிழர்களைக் கொண்டு வரும் உத்தியுடன்-தான் இந்திரா பேராயத்துடன் இணைந்து இவர் தேர்தலில் நின்றார். இடையில் இராசீவ் இறந்தது மேலும் இவர்கள் நோக்கத்திற்கு உறுதுணையாகி, மக்களிடத்தில் இவர்களுக்கு ஒரு கழிவிரக்கத்தை-யும் நம்பிக்கையையும் தோற்றுவித்துக் கொடுத்-தது. அதனாலேயே இக் கூட்டணிக்குத் தமிழக மக்கள் இந்த அளவில் ஏமாற வேண்டி யிருந்தது. இல்லெனில் முந்தைய தேர்தல் முடிவுகளை விடக் குறைவான ஆதரவைத்தான் இவர்கள் பெற்றிருக்க முடியும். பற்றும் பற்றாமைக்குக் கலைஞர் பால் பொது மக்கள் கொண்டிருந்த வெறுப்பும் இவர்-களுக்கு ஊதியமாய் அமைந்து விட்டது. இவ்வா-றான ஒரு முடிவுக்குக் கலைஞர் வந்து விட வேண்டி-யிருக்கும் என்பது பற்றியும், செயலலிதாவிடம் இவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் அவர்க்கு முன் கூட்டியே பல முறை அறிவுறுத்தியிருந்தோம். அவற்றை யெல்லாம் கலைஞர் எண்ணியிருக்கவே இல்லை என்பது அவர் தோல்வியில்தான் உணர முடிந்தது.

எப்படியோ, நடக்கக் கூடாதது நடந்து விட்-டது. கலைஞர் எப்படி இத்துணைப் பெரிய படு தோல்வியை எதிர்பார்த்திருக்க மாட்டாரோ, அப்-படியே செயலலிதாவும் இத்துணைப் பெரிய படு வெற்றியையும் எதிர்பார்த்திருக்க மாட்டார் என்-பது அவர்கள் உள்ளிட்ட அனைவருக்குமே ஒரு புதிரான செய்திதான்! இருப்பினும் தேர்தல் முடிவு, அது நேர்மையாக வந்த தென்றாலும், நேர்மையற்ற முறையில் கிடைத்த தென்றாலும், அஃது ஏற்றுக்கொள்ளப் பெற வேண்டியதே! இனி அதைப் பற்றியெல்லாம் எண்ணியோ வருந்தியோ பயனில்லை.

இனி நாம் எண்ண வேண்டுவதும், வருந்த வேண்டியதும், இந்தத் தட்டுக் கெட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களைப் பற்றித்தான்! கலைஞர் தேவையில்லை என்றால், ஒரு செயலலிதா-தானா இவர்கள் கண்களில் பட வேண்டும். சட்டி சுடுகிறதென்று எட்டிக் குதித்து நெருப்பில் விழுந்து விட்டார்களே! இந்தத் தீங்கான முடிவுக்கு ஒரு வகையில் கலைஞரும் காரணம் என்றாலும், அவரை எண்ணி மட்டுமே தமிழர்கள் இருக்கச் கூடாது என்னும் முன்னறிவு இன்னும் அவர்-களுக்கு முகிழ்க்க வில்லையே! 'இருந்தால் செக்கில் இருப்பேன்; இல்லையெனில் தூக்கில் தொங்குவேன்' என்னும் அவலக் கதையாக அன்றே இவர்கள் முடி-வெடுத்து விட்டார்கள்! அந்தோ! தமிழர்களே! உங்-கள் நிலை மிகவும் இரங்கத் தக்கது!

செயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் மலிவு மதுக் கடைகளை மூடுவதற்குக் கட்டளையிட்டது ஒரு கவர்ச்சியான அரசியல் கடைப்பிடியே தவிர வேறென்றும் இல்லை. சட்டம் போட்டுத் தனி ஒழுக்-கத்தை வருவித்து விட முடியாது. காந்தியின் காலம் வேறு; இக்கால் நடந்து வரும் அறிவியலும் உரிமையும் சேர்ந்தியங்கும் காலம் வேறு. மதுக் குடிப்பால் மக்கள் கெட்டுப் போவதையும் ஏழைய-ராய்ப் போவதையும் விடத் திரைப் படங்களால் வரும் கேடுகளும் ஏழ்மையும் பல மடங்கு அதிகம். அதைச் சட்டமிட்டுத் தடுக்க முடியுமா?

தமிழ் மக்களுக்கு எத்துணை அரசியல் நன்-மைகள் கிடைத்தாலும், அவை செல்வர் வீடுகளில் கையேந்தும் ஏழை வேலைக்காரர்களுக்குக் கிடைக்-கும் கழிவுச் சுவையுணவு வகைகளைப் போன்ற-வையே! அவற்றை உண்டு மகிழ மகிழ உரிமை உணர்வுகள்தாம் அற்றுப் போகும். அடிமை யுணர்வுதான் வளரும். அத்தகைய கழிவுச் சுவை-யுணவு போல் செயலலிதா சில அரசியல் கவர்ச்சி-களைச் செய்யலாம். ஆனால், அதால், தமிழர்கள் பெறும் நிலையான இன அடிமைத் தனத்தை யார் வந்து நீக்குவது? தமிழின நலம் கொண்ட நல்லுளங்கள் சிந்தித்து, ஆக்க நிலைகளை வளர்த்தெடுக்குமாக!

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்."

O

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என நம்புகிறேன். "எங்கும் எதிலும் தமிழ்" தூய்தமிழ்த் தொண்டியக்கம், என்றியங்கும் உ.த.மு.க. அன்பர்களையும் ஆர்வலர்களையும் சார்ந்தியங்குவது நன்று.' இதற்கான கொள்கை வரைவினை எழுதல் வேண்டும். இதனை உ.த.மு.க— தமிழக நடுவக்குழுவில் ஆய்வுக்கு வைத்துச் செமுமை செய்தல் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இம்மடல் மீது கருத்துக் கூறுங்கள், அது நம் இணைவான செயலுக்கு உரமளிக்கும்.

பறம்புக்குடி அன்புடன்,
25-10-'90 துணைப் பொதுச் செயலர்
பெறுநர் : திரு. குழந்தை ஈசுவரசன், தூயதமிழ் ஆய்விக்க நெறியாளர், திருச்சி-16

### 4. சமநிலைக் குமுகாய முனைப்பியக்க நெறியாளர்க்கு,

வாழ்த்துகளுடன், 20-10-90—21-10-90 இல் கூடிய உ.த.மு.க தமிழக நடுவக்குழு கூட்டத்திற்குத் தங்கள் வருகையை எதிர் பார்த்திருந்தோம். அந்த நாள்களில் உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகளில் ஒன்றான "சமநிலைக் குமுகாயம்' என்னும் செயலமைப்புக்குத் தங்களை நெறியாளராக நடுவக்குழு ஏற்புச் செய்துள்ளது. எனவே, வரலாற்றுத் தேவை காரணமாக, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தமிழக நடுவக்குழுவின் சமநிலைக் குமுகாய முனைப்பியக்க நெறியாளராக அமர்த்தம் செய்யப் பெற்றுள்ளீர்கள்.

இதற்கான கொள்கை வரைவினை, மேலுமிருவரைத் தாங்களே தெரிவு செய்து, இணைந்து உருவாக்கி, உ.த.மு.க நடுவக்குழுவின் ஆய்வுக்கு வைத்து உதவுவீர்கள் என நம்புகிறேன்.

தங்களுக்குள்ள இந்த வேலைப் பிரிவினையை ஏற்கும்படி தனிப்பட்ட முறையிலும் கேட்டுக் கொள்வதைத் தவறாகக் கொள்ளமாட்டீர்கள் எனக் கருதுகின்றேன்.

இம் மடல் பற்றிய தங்கள் விரிவான கருத்தினை எதிர் நோக்கியுள்ளேன்.

பறம்புக்குடி
25-10-'90 துணைப் பொதுச் செயலாளர்
பெறல் :- திரு. மா. செ. தமிழ்மணி, மாத்தூர் (அஞ்சல்) 631 701

### 5. அரசியல் ஆவணக்களரி நெறியாளர் அவர்களுக்கு:

வாழ்த்துகளுடன். தங்கள் பணி பெரிதுதான் என்றாலும், இரண்டு பேரை இணைத்துக் கொண்டு ஒரு கொள்கை வரைவை எழுதி. உ.த.மு.க. நடுவக்குழுவிற்கு ஆய்வின் பொருட்டு அனுப்புங்கள். தங்கள் வேலைமுறை பற்றிய முடிவெடுக்கத் தன்னுரிமை உடைய உங்களுக்குச் சில எண்ணங்களை முன் வைக்கிறேன்.

தமிழின நலஞ்சார்ந்தியங்கும் அரசியலமைப்புகள் எவை? அவற்றின் அரசியல் ஆவணங்களின் தொகுப்பைத் திரட்டுக. அறைக் கூட்டம் நடத்தி, உ.த.மு.க. அன்பர்களுடன் அந்தந்த அரசியல் போக்குகளில் அக்கறை உடையவர்களைக் கொண்டு கலந்து பேசுக. அவற்றின் முடிவான கருத்துரைகளை நடுவக்குழுவின் அரசியல் உணர்வு மட்டத்தை உயர்த்தப் பயன்படுத்துக,

உ.த.மு.க. நடுவக்குழுவின் கூட்டத்திற்குப் பிறகு, தாங்கள் எடுத்துவரும் முயற்சிகள் பற்றி எழுதுக.

பறம்புக்குடி, தங்கள்
25-10-'90 துணைப் பொதுச் செயலாளர்
பெறல் :- திரு. க. கண்ணன், அரசியல் ஆவணக்களரி நெறியாளர், திருச்சி மாவட்டம்.

### 6. பண்பாட்டுப் பரிமாற்றச் செயலக நெறியாளர்க்கு:

வாழ்த்துகளுடன், தமிழகப் பண்பாட்டுச் சூழல்-அயல் பண்பாட்டுத் தாக்கம் ஆய்வுக்குரியன. உலகில் நம் தமிழினம் எந்த நிலையில் உள்ளது. இது குறித்தறியப் பல்வேறு உயர்மட்ட அமைப்புகள் உள்ளன. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் அவற்றின் வெளிப்பாடுகள் பற்றிய உண்மைகளை அறிய உதவுவதில் அக்கறை காட்டுங்கள்.

கடுமையான இப்பணியைத் தொடர நம் தலைமையோடும், தமிழின அறிஞர் ஆராய்ச்சியாளரோடும் தொடர்பு கொண்டு ஓராய்வு வரைவை உருவாக்கி உ.த.மு.க. நடுவக்குழுவின் கலந்துரையாடலுக்கு வைத்திட முயல்க.

பறம்புக்குடி நன்றியுடன்,
25-10-'90 துணைப் பொதுச் செயலர்.
பெறல் : திரு. ப. முருகவேள், பண்பாட்டுப் பரிமாற்றச் செயலக நெறியாளர், உ.த.மு.க நடுவக்குழு, சுண்ணாம்பூர், மதுரை-மாவட்டம்.

### 7. கலைவளர்ச்சி இயக்க நெறியாளர்க்கு:

வாழ்த்துகளுடன், வில்லிசைக் கலை, நாடக ஆக்கம் போன்றவற்றில் முன்னறிவும் தேர்ச்சியும் உடைய தாங்கள், உ.த.மு.க, — நடுவக்குழுவின் முடிவின்படி கலை வளர்ச்சி இயக்க நெறியாளர் ஆகியுள்ளமை கண்டு மகிழ்கிறேன்; பாராட்டுக்கள்.

கலை, பண்பாட்டுத் தளத்தில் தங்களின் தொண்டினைப் பெரிதும் எதிர்நோக்கியுள்ளேன்.

கலைஞர்களையும், படைப்பாற்றல் உள்ள ஆர்வம் கொண்ட இளைஞர்களையும், மகளிரையும் வளர்த்தெடுக்கும் அரிய பொறுப்புப்பேற்றுள்ள தங்களுக்கென் எண்ணங்கள்.

Scanned with CamScanner

கலை, இலக்கியம் பற்றிய பாவலரேறு கண்ணோட்டம்—இன்று தோன்றியுள்ள கலை இலக்கியப் படைப்புக் குறித்த திறனாய்வுகள் பற்றி அறைக் கூட்டம் நடத்தி அதன் வளர்ச்சியொட்டி அமைப்பைக் கட்டி உதவுங்கள்.

விரிவான கொள்கை வரைவு எழுதி, உ.த.மு.க. நடுவக்குழுவின் திறனாய்வுக்கு வைத்து உதவுங்கள்.

பறம்புக்குடி வணக்கத்துடன்,
25-10-90 **துணைப் பொதுச் செயலர்**

பெறல்: திரு. **அதியமான்**, கலை வளர்ச்சி இயக்க நெறியாளர், தாழையூற்று, தி.க.பொ, மாவட்டம் 627 357.

### 3. கட்சி அரசியல்!

(1) ஆரியர் இயக்கங்களில் 'கட்சி அரசியல்' 'அரசியல் சார்பற்றவா' என்ற முகமூடி போட்டுக் கொண்டிருப்பதைக் காண்கின்றேன். அரசியல் சார்பைச் சொல்லி, மக்கள் நாயக நடைமுறையில் இயங்கக் கட்சி; பணிகளுக்குக் கற்றுத்தராமல் 'அரசியல் கட்சிகள்' 'போலியான அரசியல் நடத்துகின்றன என்று கருதுகின்றேன்.

தோழர். இராமுண்ணி காலத்திலிருந்து அண்மைவரை தொடக்கக் கல்வி ஆசியர் இயக்கங்களில் ஏற்பட்டு வந்துள்ள பிளவுகள், புதிய அணிகள், இணைப்புகளிலிருந்து இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.

(2) அசாம் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் நாயகம் என்று மாரடிக்கின்றவர்கள், தேசிய இனப் போராட்டங்களைக் கண்டஞ்சி, 'வன்முறை' என்ற முத்திரை போட்டுத் தங்கள் கொடுநெறி-அதிகார வன்மத்தை மேற்கொள்கின்றனர்.

அரசியல், 'கட்சி அரசியல்' போட்டிகளில் தன்னல அரசியலாக வடிவம் பெற்று வருவதைக் காண்கிறேன்.

### 4. அடிமை உணர்வும், ஆளும் ஆசையும்

கலைஞர் தமிழகத்தில் போராளிகள் பற்றிக் கூறிவரும் கருத்துகளைப் பார்க்கும் போது, நடுவணரசின் வழியிலேயே 'தமிழக அரசு' பிசகாமல் போகிறது என்று தெரிகிறது. போராளிகள் குறித்த அச்ச வுணர்வு தமிழர்களுக்கு வேண்டாத ஒன்று. தமிழினத்தின் விடிவுக்காகத் தமிழீழத்தில் நடக்கும் போராட்டம் 'தமிழகத்தில்' தோன்றும் என்றஞ்சுவது வல்லரசிய ஆதரவுப் போக்காலேயே எனலாம்!

'விட்டு விடுதலையாகி விடு சிட்டுக்குருவியைப் போல' என்று இவர்களிடம் ஓதிப் பயனில்லை. அடிமை உணர்வும்; பெருநிலமாளும் ஆசையும் கொண்டுள்ளவர்களின் 'புலம்பலே' என்று தோன்றுகிறது.

*1-12-90:* ஆசிரியர்கள் 'புனிதர்களாக' இருத்தல் வேண்டும். ஆனால் அவர்களை ஆள்பவர்கள்—அவர்களின் மேலதிகாரிகள் 'அற்பர்கள்'ாகவும், அடாவடிக் காரர்களாகவும், கையூட்டு வாங்கும் கயவர்களாகவும் இருப்பதை 'இந்த மக்கள்' கண்டும் காணாதவர்களாக இருக்கிறார்களே? ஏன்?

மதுரைக்குப் புறப்பட்டேன். தமிழ்நாடு வணிகக் கழக அரங்கில் கூட்டம்—திருமணம் சங்கமி-நடராசன் மகன் சித்தார்த்தனுக்கு கருத்தரங்கம் நிகழ்ந்தது.

என் நெஞ்சில் 'திராவிடர்' கழகம் வைத்துக் கொண்டு, 'தமிழர் முகவரியை இழந்து போனதற்காக இவர்கள் ஏன் வருந்துகிறார்கள்? என்ற வினா மீண்டும் மீண்டும் எழுந்தபடி இருந்தது. 'தமிழன்' குற்றப்படுகிற முத்திரைகளை முக்காமல் முனகாமல் ஏற்றுக் கொள்ள எவரிடம் எங்கே கற்றானோ?

*2-12-90* எளிய திருமணம் பெரியார் விரும்பியது—இரண்டு தி.க. ஆர்வலர் திருமணங்களும் 'பெரியார் விரும்பிய'படி நடக்கவில்லை.

புதிய அறிமுகங்கள்; புதிய தொடர்புகள் பழைய முகங்கள் மெள்ள மெள்ள நிழல்போல! ஆனபோதும் இயக்கம் அனைத்தையும் புதுமை பண்ணும். நம்புகிறேன்

*3-12-90* 'மனித உரிமை இயக்கம்...! தமிழகத்தில் கூட்டப் பெற்று வருகின்றது. உரிமைகள் குறித்த, உணர்வூட்டவும், அவற்றை மீட்டெடுக்கவும் உதவும் என நம்புகின்றேன்!

3-12-90 *பறம்பை அறிவன்*

### அமர்த்தங்கள்:

***அமர்த்தங்கள்:*** 19-12-90 — அதியமான் மடல் பரிந்துரை:

***கீழத் தென்கலம் கிளை:***
தலைவர், **ந. பொருநையன்,**
அமைப்பாளர்: **பசும்பொன்,**
பொருளாளர்: **தென்மாறன்**
முகவரி: மொழிஞாயிறு பாவாணர் இல்லம், உ த மு க அலுவலகம், கிழத் தென்கலம் கிளை, தென்தலம் (அஞ்) வழி: சங்கர் நகர், தி.க. மாவட்டம் 627 357

14-1-91—அதியமான் மடல் பரிந்துரை

***கல்லிடைக் குறிச்சிக் கிளை:***
தலைவர்: இ. சுப்பையா, 79, அகத்தியர் கோவில் தெற்குத் தெரு, கல்லிடைக் குறிச்சி (அஞ்) அம்பா சமுத்திரம் (வட்), தி.க. (மாவ)
அமைப்பாளர்: கனகராசு, வணிகவியல், இளங்கலை, 97, மேல்முகம் காமராசுத் தெரு, கல்லிடைக்குறிச்சி (அஞ்) அம்பா சமுத்திரம் (வட்) தி.க. (மாவ) 627416.

Scanned with CamScanner

துணை அமைப்பாளர்: ஆ. முருகன்,
மு.க. பொருளியல், கல்வி,
94, அகத்தியல் கோவில் தெற்கு மேட்டுத் தெரு, கல்லிடைக் குறிச்சி, (அஞ்)
அம்பா சமுத்திரம் (வட்) தி.க. (மா.வ)
பொருளாளர்: சு. குமார்
133-பி, மேல் முகம் காமராசர் தெரு, கல்லிடைக் குறிச்சி (அஞ்)
அம்பா சமுத்திரம், தி.க. (மா.வ) 627416

தாழையூற்றுக் கிளை:
தலைவர்: சு. இரத்தினம், 255/எ, மதுரைச் சாலை, சங்கர் நகர் (அஞ்) தி.க. (மா.வ) 627357,
அமைப்பாளர்: சு. மோகன், 9/13, தமிழ் இல்லங்கள் வளாகம், உள்மின் நிலையம் எதிரில், தாழையூற்று, சங்கர் நகர் (அஞ்) தி.க. (மா.வ) 627357
துணை அமைப்பாளர், செ. வேல்பாண்டி
9/127, தமிழ் இல்லங்கள் வளாகம் உள்மின் நிலையம் எதிரில், தாழையூற்று, சங்கர் நகர் (அஞ்), தி. க. (மா.வ)
பொருளாளர்: சு. செல்லத்துரை
9/130, தமிழ் இல்லங்கள் வளாகம் உள்மின் நிலையம் எதிரில், தாழையூற்று, சங்கர் நகர் (அஞ்) தி.க (மா.வ) 627357

3-4-91 திருச்சி மாவட்டம்—கரடிப்பட்டி, அரசியல் ஆவணக் களரி நெறியாள்: க. கண்ணன் தலைமையில் துணைப்பொதுச் செயலாளர், உ.த.மு.க. முன்னிலையில்
—கரடிப்பட்டி கிளை:
தலைவர்: சு. பழனிச்சாமி, கரடிப்பட்டி, கஞ்சநாயக்கன் பட்டி (அஞ்) துவரங்குறிச்சி (வழி) திருச்சி (மா.வ)
செயலா: அ. தங்கராசு கரடிப்பட்டி, கஞ்ச நாயக்கன்பட்டி (அஞ்)) துவரங்குறிச்சி (வழி) திருச்சி (மா.வ)
பொருளா: வெ. ப. கருமனம்பலம்,
கரடிப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி (அஞ்) துவரங்குறிச்சி (வழி) திருச்சி (மா.வ)

4-4-91 தஞ்சை மாவட்டம் காசவளநாடு, தெக்கூர் உ.த.மு.க. தமிழகத் தலைமை அமைப்புச் செயலாளர் த. தமிழ்த் தென்றல் தலைமையில், உ.த.மு.க. துணைப்பொதுச் செயலாளர், பறம்பை அறிவன் அரசியல் ஆவணக் களரி நெறியாளர் க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில்.
கா. தெக்கூர்கிளை:
தலைவர்: ந. சிதம்பரம், மே/பா, திரு. நல்லதம்பி, காச வளநாடு தெக்கூர், நடுர் (அஞ்) தஞ்சை மாவட்டம்
செயலாளர்: சி. கண்ணன், மே/பா, திரு. சின்னையா.
துணைச் செயலர் கு. செல்வராசு, மே/பா, குருசாமி,

## மிகுதுயர்ப் படுகிறோம்!

ஈரோடு 'குறளியம்' ஆசிரியரும், வேலா நிறுவன உரிமையாளரும், அரும் பெருந் திருக்குறள் தொண்டரும், நம் அருமை நண்பரும் ஆகிய வேலா-அரசமாணிக்கனார் 24-6-91 அன்று எதிர்பாராத வகையில், ஈரோட்டில் மறைவெய்தியதறிந்து நெஞ்சு குலுங்கினோம்; நெட்டுயர்ப்புற்று மிகுதுயர் கொண்டோம். எந் நேரமும் எப்பொழுதும் திருக்குறள் நெறி பரப்புவதையே தம் முழு மூச்சாகக் கொண்டு உழைத்த அத் தமிழ்த் தகையார் மறைவு தமிழ்மொழி, இனத்திற் குற்ற பேரிழப்பாகும்.

அவரைப் பிரிந்து வாடும் அவரின் அருமை துணைவியார்க்கும், பிள்ளைகளுக்கும், உற்றார் உறவுக்கும், அருந்துணை நண்பர்க்கும் நம் நெஞ்சின் ஆழ்ந்த ஆற்றொணத் துயரையும் இரக்கத்தையும் ஆறுதலையும் உரியன வாக்குகிறோம். —பெருஞ்சித்திரனார்.

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு: 63**
முடியரசு அமைப்பில், அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி!' குடியரசு அமைப்பில் குடிகள் எவ்வழி, ஆட்சி அவ்வழி! எனவே குடிகளுக்கேற்ற ஆட்சிதான் குடியரசில் அமைய முடியும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 146
அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு. 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.